## 30.05.2017:-எங்கும் பணியாற்ற எப்போதும் தயாராக இருத்தல்



**தான் பணியாற்றும் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல எப்போதும் தயாராக இருப்பவராக ஒரு அருள்பணியாளர் இருக்க வேண்டும், ஏனெனில் வரலாற்றின் மையம் அவரல்ல, மற்றும் அவர் ஒரு சுதந்திரமானவர் என்பதை அவர் அறிவார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.**

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எந்த தீமைகளோடும் உடன்பாடு கொள்ளாமல், தன் மந்தையிடமிருந்து தனக்கான எவ்வித எதிர்பார்ப்புமின்றி வாழும் சுதந்திர மனிதராகிய மேய்ப்பருக்குத் தெரியும், இறைவன் அனுப்பும் இடத்திற்கு பணியாற்றச்செல்ல தான் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று, என உரைத்தார்.

செவ்வாய்க்கிழமையின் திருப்பலி முதல் வாசகமாகிய திருத்தூதர் பணிநூலில் தூய பவுல், தான் தூய ஆவியின் கட்டளைக்கிணங்க எருசலேமுக்குச் செல்வதாக கூறியதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, ஒவ்வொரு மேய்ப்பரின் பணியும் எப்போதும் முழுமையடைந்ததாக இருக்க வேண்டும், பாதியில் விட்டுச் செல்வதாக அல்ல, என்றார்.

மந்தையுடனான ஒரு மேய்ப்பரின் பிணைப்பு, இயேசுவின் சிலுவையால் சுத்திகரிக்கப்பட்டதாக இருக்கும்போது, அதனை விட்டுவிட்டு இன்னொரு இடத்திற்கு பணியாற்றச் செல்வது, இலகுவானதாக இருக்கும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். எந்த ஒரு மேய்ப்பரும், தீயவைகளோடு உடன்பாடு கொள்ளாதவராகவும்,

அனுப்பப்படும் இடங்களுக்கு எவ்வித கேள்வியும் இன்றி கீழ்ப்படிதலுடன் செல்பவராகவும், தன் வாழ்வுக்கு முக்கியத்துவம் தராதவராகவும் செயல்படவேண்டும் என மூன்று விதிகளை தன் மறையுரையில் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் மேய்ப்பர்களாகிய அருள்பணியாளர்கள், ஆயர்கள், திருத்தந்தை என அனைவருக்காகவும் செபிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி